STATE COURTS SINGAPORE

# சிறு கோரிக்கை நடுவர் மன்றங்களின் உத்தரவுகள்



# சிறு கோரிக்கை நடுவர் மன்றங்களின் உத்தரவுகள்

சிறு கோரிக்கைகள் தொடர்பான சர்ச்சைகளை விரைவாகவும் மற்றும் குறைந்த செலவிலும் தீர்ப்பதற்கு, சிறு கோரிக்கை நடுவர் மன்றங்கள் (எஸ்சிடி) ஒரு தளமாக அமைகின்றன.

## வழக்கமாக பிறப்பிக்கப்படும் எஸ்சிடி உத்தரவுகள்

**பணம் செலுத்துமாறு பிறப்பிக்கப்படும் உத்தரவு (மணி ஆர்டர்):** பணம் செலுத்தப்பட வேண்டும் என்ற ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படும் போது, ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினருக்கு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையைக் காலக் கெடுவுக்குள் செலுத்திவிடவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், பணத்தைப் பெற உரிமையுள்ள தரப்பினர், பணத்தைச் செலுத்தத் தவறிய தரப்பினருக்கு எதிராக அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர் வாதமின்றி பிறப்பிக்கப்படும் உத்தரவு (டிஃபால்ட் ஆர்டர்):** எஸ்சிடி-யில் அட்டவணையிடப்பட்ட கலந்தாலோசனை அல்லது வழக்கு விசாரணைக்கு எவரேனும் ஒரு தரப்பினர் வர அல்லது கலந்துகொள்ள தவறும் போது, அத்தரப்பினருக்கு எதிராக எதிர் வாதமின்றி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படலாம். எதிர் வாதமின்றி பிறப்பிக்கப்படும் உத்தரவு என்றால், அது பணம் செலுத்தப்பட வேண்டும் என்ற ஓர் உத்தரவாக இருக்கலாம் அல்லது ஒரு தள்ளுபடி உத்தரவாக இருக்கலாம். எதிர்வாதி வரத் தவறும்போது, கோரிக்கையாளருக்குச் சாதகமாக பணம் செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்படலாம். கோரிக்கையாளர் வரத் தவறும்போது, கோரிக்கையாளருக்கு எதிராக எதிர்வாதமில்லா தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.

**வேலை உத்தரவு (வர்க் ஆர்டர்):** ஒரு வேலை உத்தரவு பிறப்பிக்கப்படும் போது, ஒரு தரப்பினர், வேலை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியைக் காலக் கெடுவுக்குள் செய்துவிடவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அப்பணியைப் பெற உரிமையுள்ள தரப்பினர், அந்த வேலை உத்தரவைச் சிறு கோரிக்கை நடுவர் மன்றங்களில் மாற்ற அல்லது மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் அமல்படுத்த விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

**உடன்பாட்டு உத்தரவு (கன்சண்ட் ஆர்டர்):** வழக்கு விசாரணை அல்லது கலந்தாலோசனை கூட்டத்தின்போது, கோரிக்கையில் அல்லது வழக்கு நடைமுறையில், சர்ச்சைக்குரிய ஒரு சில அல்லது அனைத்து விவகாரங்களையும் தீர்த்துக் கொள்ள தரப்பினர்கள் ஒப்புக்கொண்டால், ஓர் உடன்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்படலாம். தரப்பினரின் ஒப்பந்த நிபந்தனைகளை உடன்பாட்டு உத்தரவு பதிவு செய்யும்.

**இடைநிறுத்தம் செய்தலுக்கான உத்தரவு (டிஸ்கன்ட்டிநியூவன்ஸ் ஆர்டர்):** ஒரு கோரிக்கை எஸ்சிடி-யின் சட்ட அதிகார வரம்புக்குள் இல்லை என எஸ்சிடி-யால் கண்டறியப்பட்டால், அக்கோரிக்கையை இடைநிறுத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படலாம். இடைநிறுத்தம் செய்யப்பட்ட கோரிக்கையின் தொடர்பான எஸ்சிடி வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.

எஸ்சிடி உத்தரவுகள், மாவட்ட நீதிமன்ற ஆணைகளாக அமல்படுத்தப்படும்.

## அமலாக்கம் செய்வதற்கு முன் நீங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டியவை

> உத்தரவை அமல்படுத்துவதில் பயன் ஏதும் உள்ளதா? உத்தரவை அமல்படுத்துவதற்குத் தேவையான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய, நீங்கள் நேரம், உழைப்பு மற்றும் பணம் ஆகியவற்றை ஒதுக்கி வைக்கவேண்டும், மற்றும் முடிவும் உறுதியற்றது என்பதைக் கருத்தில்கொள்ளவும்.

> அமலாக்க நடவடிக்கைகளில் அரசு நீதிமன்றங்களுக்குச் செலுத்தப்படும் கட்டணங்கள் திரும்பப் பெற முடியாதவை.

> எதிர்வாதிக்கு எதிராக மற்ற நபர்களால் தொடரப்பட்ட ஏதேனும் அமலாக்க நடவடிக்கைகள் தற்போது உள்ளனவா?

> எதிர்வாதி நொடித்தவர் (திவால் ஆனவர்) என்று தீர்ப்பளிக்கப்பட்டவரா*?

> கணக்கியல், நிறுவனக் கட்டுப்பாட்டு ஆணையத்தின் பதிவேட்டில் எதிர்வாதி, இன்னும் "செயல்படுகிறாரா" அல்லது அவருக்கு எதிராக கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

(மேல் குறிப்பிடப்பட்ட தகவலை, அரசு நீதிமன்றங்கள், 1 ஹெவ்லாக் சதுக்கம், 2-ம் தளம், சிங்கப்பூர் 059724 என்ற முகவரியில் அமைந்துள்ள லாநெட்டில் (LawNet) & கிரிம்சன் லாஜிக் சர்வீஸ் பியுரொவில் (Crimson Logic Service Bureau) தேடலாம்)

*நீங்கள் அல்லது எதிர் தரப்பினர் ஏதேனும் நொடிப்பு, நிறுவனக்கலைப்பு, பேணுநர் அல்லது நீதித்துறை நிர்வாக நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தால், நீங்கள் எடுக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகள் குறித்து தயவுசெய்து உங்களின் சொந்த சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## பணம் செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அமல்படுத்துதல்

ஒரு தரப்பினர் பணம் செலுத்த தவறினாலோ அல்லது பணம் செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லை என்றாலோ, நீங்கள் அந்த உத்தரவை அமல்படுத்த பரிசீலிக்கலாம். உத்தரவை அமல்படுத்த விண்ணப்பிக்கும் நபர் "தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர்" என்றும் மற்றொரு தரப்பினர் "தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளி" என்றும் அறியப்படுவர்.

## வேலை உத்தரவை அமல்படுத்துதல்

ஒரு தரப்பினர் வேலை உத்தரவுக்குக் கீழ்ப்படிய தவறினால், அந்த உத்தரவை மாற்ற, சமூக நீதி மற்றும் நடுவர் மன்றங்களின் வழக்கு பதிவு செயல்முறையில் (CJTS), "இணையம் வழி விண்ணப்பங்களைச்" சொடுக்கி, அதன் பின் "எஸ்சிடி-யைத்" ("SCT") தெரிவுச்செய்து, "வேலை உத்தரவை மாற்றுவதற்கான கோரிக்கை" என்ற மின்னியல் சேவையைப் பூர்த்திசெய்வதன் வழி நீங்கள் நடவடிக்கைகள் எடுக்கலாம். நடுவர் மன்ற மேஜிஸ்திரேட்டின் முன்னிலையில் ஒரு விசாரணைக்கு வருவதற்கான தேதி தரப்பினர்களுக்கு அறிவிக்கப்படும். மாறாக, அவ்வேலை உத்தரவை ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் அமல்படுத்த, நீங்கள் ஈ-லிட்டிகேஷன் செயல்முறையில் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்யலாம் [ஈ-லிட்டிகேஷன் செயல்முறை குறித்து மேலும் தகவல் பெற இங்கே சொடுக்கவும்.]

**அமல்படுத்துதல்**

பணம் செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பொதுவாக பின் வருமாறு அமல்படுத்தப்படும்:

**பறிமுதல் (ஜப்தி) மற்றும் ஏல விற்பனை பேராணை**

பறிமுதல் (ஜப்தி) மற்றும் விற்பனைக்கான நீதிமன்ற பேராணை, ஒரு நீதிமன்ற அமினாவைத் தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் வளாகத்திற்குள் நுழையவும், அவரது அசையும் சொத்துகளைக் கைப்பற்றியும், விற்கவும் அனுமதிக்கின்றது. அதன் பிறகு, தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கப்படவேண்டிய எல்லா பணத்தையும் தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளி 7 நாட்களுக்குள் செலுத்தியாக வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தப்படவில்லை என்றால், தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர், கைப்பற்றப்பட்ட பொருட்களை ஏல விற்பனையில் விற்று அதன் மூலம் பணத்தை மீட்கும் நடவடிக்கையைத் தொடர விண்ணப்பிக்கலாம்.

தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளிக்குப் போதுமான மதிப்பில் உறுதியான சொத்துகள் உள்ளன என்றும், அவற்றை விற்றால் அமலாக்க நடவடிக்கையின் செலவை மீட்கவும் உத்தரவில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையைச் செலுத்தவும் முடியும் என்று தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர் அறிந்திருந்தால் இந்த விருப்பத் தெரிவைப் பரிசீலனை செய்யலாம். பறிமுதல் (ஜப்தி) மற்றும் ஏல விற்பனைக்கான நீதிமன்ற பேராணை வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது, மற்றும் கடன் தொகையும் நிறைவேற்ற செயல்முறையின் செலவும் மீட்கப்படும் என்பதற்கான உத்தரவாதமும் கிடையாது. மேல் விவரம் அறிய, 2-ம் தளத்தில் அமைந்துள்ள அரசு நீதிமன்றங்களின் சேவை மையத்தை அலுவலக நேரத்தின் போது அணுகவும்.

**பற்றுகை நடவடிக்கைகள்**

ஒரு "கார்னிஷி" (garnishee) என்பவர் தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியிடம் பணம் செலுத்த வேண்டியவர் (எ.கா. அவருடைய வங்கி). ஒரு பற்றுகை ஆணை கார்னிஷியைத் தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளிக்குப் பதிலாக தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவரிடம் பணத்தைச் செலுத்த கடமைப்படுத்துகிறது. எடுத்துக்காட்டுக்கு, உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையைத், தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவரிடம் செலுத்தும்படி தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் வங்கியை உத்தரவிடுமாறு நீதிமன்றத்திடம் ஒரு விண்ணப்பம் செய்யப்படலாம். ஆனால், தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளிக்கு வங்கியில் போதுமான பணம் இருந்தால் மட்டுமே இது சாத்தியப்படும்.

தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியிடம் கடன் பட்ட ஒரு தனிப்பட்ட நபர் இருக்கிறார் என்பதையும் (எவரேனும் ஒரு மூன்றாம் தரப்பினர்), தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் வங்கி கணக்கு விவரங்களையும் தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர் அறிந்திருந்தால் இந்த விருப்பத்தெரிவு பரிசீலிக்கப்படலாம். தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளிக்கு அவரது வங்கி அல்லது வேறு எவரேனும் மூன்றாம் தரப்பினர் ஒரு தொகைப் பணத்தைக் கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதற்கான ஆவணச் சான்று இருக்க வேண்டும். மேல் விவரம் அறிய, 2-ம் தளத்தில் அமைந்துள்ள அரசு நீதிமன்றங்களின் சேவை மையத்தை அலுவலக நேரத்தின் போது அணுகவும்.

**அமலாக்கத்திற்கு முன்பு**

**தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் விசாரணை**

தீர்ப்புரைக்கப்பட்ட கடனைத் தீர்க்க தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியிடம் என்ன உடைமைகள் உள்ளன (அவரிடம் விற்பனைக்குள்ள விலைமதிப்புமிக்க சொத்து உள்ளதா, அல்லது அவருக்கு வங்கியில் பணம் உள்ளதா, அல்லது அவரது வங்கிக் கணக்கு விவரங்கள் என்ன) என்று ஒரு சத்தியப்பிரமாணத்தின் கீழ் தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியிடம் விசாரணை செய்ய தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் விசாரணை என்ற ஒரு நடவடிக்கைக்கு விண்ணப்பிக்க தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர் பரிசீலிக்கலாம்.

தீர்ப்புரைக்கப்பட்ட கடனாளியின் சொத்துக்களின் தன்மை மற்றும் மதிப்பு ஆகியவற்றைத் தீர்ப்புரைக்கப்பட்ட கடன் கொடுத்தவர் அறிந்துக்கொண்டபின், பணம் செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அமல்படுத்துவதற்கான ஆகப் பொருத்தமான நடவடிக்கையை அவர் பரிசீலித்து தேர்ந்தெடுக்கலாம்.

# எதிர் வாதமின்றி வழங்கப்படும் உத்தரவை நீக்குதல்/தள்ளுபடி செய்தல்

## ஓர் உத்தரவில் எனக்கு மனநிறைவில்லை என்றால் நான் என்ன செய்யலாம்?

உங்களுக்கு எதிராக, எதிர் வாதமின்றி பணம் செலுத்தும் உத்தரவு அல்லது எதிர் வாதமின்றி தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது நீங்கள் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்திருந்தால், அந்த உத்தரவை நீக்குவதற்கு/தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய விரும்பலாம். உத்தரவு வழங்கப்பட்ட தேதியிலிருந்து 1 மாதத்திற்குள் இந்த விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். உங்கள் விண்ணப்பத்தின் சிறப்பு தகுதிகளைப் பொறுத்து கூடுதலான கால அவகாசத்தை அனுமதிக்க எஸ்சிடி-க்கு விருப்புரிமை உண்டு. விண்ணப்பத்திற்கான விசாரணை தேதி CJTS-ல் தரப்பினருக்கு அறிவிக்கப்படும்.

ஓர் உத்தரவைத் தள்ளுபடி செய்வதற்கான ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தாலே அது நிச்சயமாக நீக்கப்படும்/தள்ளுபடி செய்யப்படும் என்று பொருள்படாது என்பதைக் குறித்துக்கொள்ளவும். அந்த விண்ணப்பத்தின் விசாரணையின் போதுதான் ஒரு முடிவு எடுக்கப்படும். ஓர் உத்தரவை நீக்க/தள்ளுபடி செய்ய சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் பொதுவான செயல்முறையைப் பின்வருவன காட்டுகின்றன:

**எதிர் வாதமின்றி உத்தரவு வழங்கப்பட்டது**

*1 மாதத்திற்குள்*

உத்தரவை நீக்க/தள்ளுபடி செய்ய விண்ணப்பம்

*தரப்பினருக்கு விசாரணை தேதி அறிவிப்பு*

**விண்ணப்பத்தின் விசாரணை**

நீக்குவதற்கு/தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது

*எதிர் வாதமின்றி வழங்கப்பட்ட உத்தரவு நிலைத்திருக்கும்*

நீக்குவதற்கு/தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது

*எஸ்சிடி, மேலும் உத்தரவுகளை வழங்கும் மற்றும்/அல்லது கோரிக்கையை விசாரிக்கத் தொடங்கும்*

## ஒரு பதிவாளரின் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு

கலந்தாலோசனையின் போது பதிவாளர் அல்லது உதவிப் பதிவாளர் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக, ஒரு தரப்பினர் மேல்முறையீடு செய்யலாம். உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 1 மாதத்திற்குள் மேல்முறையீடு அறிவிப்பைத் தாக்கல் செய்வதன் மூலம் மேல்முறையீட்டைச் செய்யலாம். மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு S$20 தாக்கல் கட்டணம் செலுத்த வேண்டும்.

## ஒரு நடுவர் மன்ற மேஜிஸ்திரேட்டின் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு

ஒரு நடுவர்மன்ற மேஜிஸ்திரேட்டின் உத்தரவுக்கு எதிராகவும் ஒரு தரப்பினர் மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீடு செய்வதற்குத் தரப்பினர் மாவட்ட நீதிமன்றத்திடம் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும். நடுவர் மன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 14 நாட்களுக்குள் இந்த விண்ணப்பம் செய்யப்படவேண்டும், மற்றும் கால அவகாச நீட்டிப்பு வழங்கப்படாது. மேல் முறையீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டவுடன், உயர் நீதிமன்றத்தின் பொதுப் பிரிவில் அந்த தரப்பினர் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்யலாம். மேல்முறையீடு செய்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்திற்கான தாக்கல் கட்டணம் S$100-யும், உயர் நீதிமன்றத்தின் பொதுப் பிரிவில், மேல்முறையீடு அறிவிப்பைத் தாக்கல் செய்வதற்கான தாக்கல் கட்டணம் S$600-யும் செலுத்தப்பட வேண்டும்.

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் **26-01-2024** தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg